# சென்னையில் பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சிகள் எது?

**புதுடில்லி, பிப். 13–**
நாளை சென்னை வரும், பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சிகள் குறித்த விபரங்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க, பிரதமர் நரேந்திர மோடி, நாளை, தமிழகத்திற்கு வர உள்ளார். அதற்கான நிகழ்ச்சி நிரலை, பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்டது.

அதன்படி, சென்னைக்கு செல்லும் பிரதமர் மோடி, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள, 'அர்ஜுன்' என, பெயரிடப்பட்ட பீரங்கியை, ராணுவத்திடம் ஒப்படைக்க உள்ளார்.

இதையடுத்து, 3,770 கோடி ரூபாய் மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள, வட சென்னை – விமான நிலையம் இடையிலான மெட்ரோ ரயில் சேவையை, பிரதமர் துவக்கி வைக்க உள்ளார்.

இதேபோல், 293.40 கோடி ரூபாய் மதிப்பில், சென்னை கடற்கரை – அத்திப்பட்டு ரயில் நிலையங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது ரயில் வழித் தடத்தையும்; மின்மயமாக்கப்பட்ட, 228 கி.மீ., நீள ரயில் பாதையையும், அவர் துவக்கி வைக்க உள்ளார்.

இதன்பின், 2,640 கோடி ரூபாய் மதிப்பிலான கல்லணை கால்வாய் புதுப்பித்தல் திட்டம்; 1,000 கோடி ரூபாய் மதிப்பில், சென்னை ஐ.ஐ.டி.,யின் ஆராய்ச்சி வளாகம் அமைக்கும் திட்டம் உள்ளிட்டவற்றிற்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

இதையடுத்து, கேரளாவுக்கு செல்லும் பிரதமர், அங்கும் பல வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைக்கிறார்.